THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 28th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: As the Hon. the Minister for Industries is leaving for Delhi, he wants his question to be taken up first, and I have agreed to it.

Industrial Training Centres for Women

* 849 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் பெண்களுக்குத் தொழில் கல்வி ஸ்தாபனம் எத்தனை, எங்கெங்கே இருக்கின்றன ?

(ஆ) அவைகளில் என்னென்ன தொழில்கள் போதிக்கப் படுகின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) & (ஆ) A statement[a] containing the particulars required is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: இந்தப் பள்ளிகளுக்கு அரசாங்கம் மானிய உதவி அளிக்கிறார்களா ? அப்படியானால் எவ்வளவு உதவி அளிக்கிறார்கள் என்பதை தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATRAMAN: அரசாங்கம் மானிய உதவி அளிக்கிறது, அது எவ்வளவு என்பதற்கு இப்பொழுது கணக்கு இல்லை. ஆனால் படிக்கிற மாணவ மாணவிகளில் மூன்றில் ஒரு பங்கு விதம் உள்ளவர்களுக்கு ரூ. 25 விதம் ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM: அந்தப் பள்ளிகளுக்கு எல்லாம் அரசாங்கம் அங்கீகாரம் அளித்திருக்கிறதா ? சில பள்ளிகளுக்கு டெம்பரவரி ரிகக்னிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேறிய மாணவ மாணவிகள் அந்தப் பள்ளிக்கூடங்களை விட்டு போகும் போது, அவைகளை நிரந்தரமாக அங்கீகாரம் அளிக்கப்படாததால், அவர்களுக்கு சர்ட்டிபிகேட் வழங்க மறுக்கப்படுகிறது. அப்படி மறுக்கப்படுவதன் காரணத்தால் அந்த மாணவ மாணவிகளுடைய கதி என்ன என்பதை அரசாங்கம் தயவு செய்து விளக்குவார் களா ?

---

[a] Printed as Appendix I on page 772 infra.

[28th April 1960

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைப்பற்றி இப்படிப்பட்ட புகார் இருக்கிறது என்று எழுதி அனுப்பினல் அதைப் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். தகுதி வாய்ந்த எல்லா ஸ்தாபனங்களுக்கும் எல்லா ரிகக்னிஷனும் கொடுத்திருக்கிறோம். தகுதி முழுமையும் பெருத ஸ்தாபனங்களுக்கு டெம்பரரி ரகக்னிஷன் கொடுத்திருக்கிறோம். ஏதாவது ஒரு ஸ்தாபனத்தைப்பற்றி குறை இருந்தால் அதை சர்க்காருக்கு எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இப்பொழுது பெண்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள் எல்லாம் நீடில் வொர்க், எம்ப்ராயிடரி, ட்ரஸ் மேகிங் இவைகளில்தான் பயிற்சி கொடுக்கப் படுவதாகக் காணப்படுகிறது. அது மாத்திரம் போதாது. சாதாரணமாக தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அளவில் மற்ற இதர நாடுகளில் இருக்கும்படியான நிலைமையில் நம் பெண்களும் வேலை செய்யும்படி ஒரு பயிற்சி கொடுக்க அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸ்திரி சாதன மந்திர் என்று மைலாப்பூரில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் சொன்னபடி அங்கே பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்றும் அங்கு ப்ளீச்சிங், டையிங் ட்ரெயினிங் போன்றவைகளும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதைத்தவிர பிட்டர், டர்னர் முதலியவைகளிலும் பயிற்சி பெற வேண்டுமென்றல் அதற்கு இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்ட்டிடியூஷன் இருக்கிறது. அதில் சேர்ந்து பயிற்சி பெறலாம். அவர்கள் சேரக்கூடாது என்பது இல்லை. அவர்களுக்கு எந்த விதமான விதிவிலக்கும் கிடையாது.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that there is a big rush for admission to these institutions especially Andhra Mahila Sabha and if so, will the Government consider opening more such institutions in our State ?

THE HON. SRI R. VENKATARAMAN: There are as many as 17 institutions in this State. Of course, there is always rush for these institutions and the Government have no proposal at the moment to expand them.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, மடந்தையர்களுக்கு மடத்தொழில் பயிற்சி அளிக்க எப்பகுதியிலாவது புகுத்தப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் மடத்தனமாக அவர்களுக்கு பயிற்சி கொடுப்பது என்பது இல்லை. (சிரிப்பு) ஹோம்சையன்சு என்பதை கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முறை இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

28th April 1960]

SRI V. K. KRISHNAMURTHY : மட்டத்தனம் என்று பொருள் படும் அளவில் நான் கேட்கவில்லை. குடும்பத் தொழிலை நல்ல முறையில் நடத்துவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறதா என்ற அர்த்தத்தில்தான் கேட்டேன். கனம் அமைச்சர் அவர்கள் அதை தவருக அர்த்தம் செய்து கொண்டிருக்கிருர். இதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

MR. SPEAKER : எல்லோருக்கும் புரிந்த தமிழில் பேச வேண்டும். அப்பொழுது தான் சரியாக புரிந்துகொண்டு பதில் சொல்லலாம்.

SRI V. K. KRISHNAMURTHY : என்னை தவருக புரிந்து கொள்வதில் நியாயம் இல்லை என்றுதான் நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : மேஜையின் மீது வைக்கப் பட்டிருக்கிற அறிக்கையின்படி வட ஆர்காட்டில் ஒரு தொழில் கூட ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. வரவு செலவு திட்டத்தில் வட ஆர்காடு ஜில்லாவை ஒதுக்க வேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு ஜில்லா விலும் வரக் கூடிய அங்கத்தினர்கள் தங்களுடைய தொகுதியில் வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அதற்கு கேள்வி நேரத்தில் பதில் சொல்வது என்பது முடியாது. பொதுவான விவாதத்தில்தான் அவர்களுடைய குறைகளைப் பற்றி கேட்டு பதில் தெரிந்து கொள்ள முடியும்.

SRI K. B. S. MANI : அறிக்கையில் 17 தொழில் கல்லூரிகள் நடத்துவதாகத் தெரிகிறது. இந்தப் பதினேழு பள்ளிகளிலும் பட்டம் பெற்றவர்களுக்கு இந்த மாகாணத்தில் உத்யோகங்களுக்கு ஊர்ஜிதம் செய்யவில்லை. அதனுல் ஜில்லாவிற்கு ஒரு கூட்டுறவு உற்பத்திசாலையை ஏற்படுத்தி, அப்படி பட்டம் பெற்றவர்களுக்கு அதில் உத்தியோகம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஸ்கீமைப்பற்றி கனம் அங்கத்தினர் சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். "பார்ட்டைமாக" அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் சொந்தமாக அதாவது "செல்ப் எம்பிளாய்மெண்ட்" என்று சொல்லக்கூடிய அளவில் தனியாக தானே ஒரு தொழில் நடத்துவதற்கு ஏற்படக்கூடிய பயிற்சி அது. அப்படி பயிற்சி பெற்றவர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பம் போட்டால் அதைப்பற்றி சர்க்கார் கவனிக்கும்.

SRI A. VEDARATHNAM : பெண்களிடையே இம்மாதிரி தொழில் பயிற்சி ஆர்வம் மிகுதியாகக் காணப்படுகிறது. தேவை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் இம்மாதிரி வருவதற்கு

பெண்களுக்கு உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படி பயிற்சி பெருவதற்கு பெண்கள் முன் வந்தால் அதற்கு வேண்டிய உதவி அளிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விதமான மனுக்களை அனுப்பினால் அவைகளைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யும்.

SRI M. WILLIAM: Are the Government aware of the fact that students who have studied in the institutions for which temporary recognition has been granted, are not issued certificates ?

THE HON. SRI R. VENKATARAMAN: If it pertains to an individual institution, then they must make separate representation to the Government.

Legislation to confer immunity on the Press

* *S.N.Q.* 14.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to bring in a legislation to confer immunity on the Press in regard to the publication of substantially true reports of the proceedings of the Assembly; and

(*b*) if so, when ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that under the existing laws, press could be sued for libel and defamation even if true proceedings of the House are published and if so, why not the Government bring in legislation to give immunity to the Press in respect of this matter ?

THE HON. SRI C. SUBRAMANIAM: Here we are so orderly that we do not indulge in libellous or defamatory matter in this House. That is why I feel that in our State this is not necessary.

SRI V. K. KOTHANDARAMAN : சட்டசபை நடவடிக்கைகளை உண்மையாய் வெளியிட பத்திரிகைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்குச் சட்டம் கொண்டுவர உத்தேசம் உண்டா என்று கேட்கப்பட்டிருக்கிறது. சட்டசபை நடவடிக்கைகளை உண்மையாக வெளியிடக்கூடாது என்ற அளவிற்கு சட்டம் இருக்கிறதா ? உண்மையை வெளியிடுவதற்கு சட்டம் வேண்டுமென்று கேட்கிற மாதிரி இருக்கிறது இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி ?

MR. SPEAKER : என்னால் பதில் சொல்ல முடியாது. மந்திரி அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

Misappropriation of funds in Madurai Municipal Office

* 804 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any case of misappropriation of funds by some of the employees of the Madurai Municipal Office was discovered recently;